தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# கல்வி தொழில்நுட்ப விண்ணப்பங்களில் தகவல் மீறல்?

## ஒன்றிய அரசுக்கு தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

புதுடெல்லி, ஏப்ரல் 13

கல்வி தொழில்நுட்ப (எட்-டெக்) விண்ணப்பங்களில் தகவல் மீறல் நடந்துள்ளதாக உலக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறித்து ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டுள்ளதா என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கடந்த 3 ஆம் தேதி கேள்வி எழுப்பினார்.

<u>இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி விவரம் :</u>

எட்-டெக் தொடர்பான விண்ணப்பங்களின் தகவல் மீறல் குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் அங்கமான மனித உரிமைகள் கண்காணிப்பு (எச்.ஆர்.டபுள்யு) அமைப்பு தெரிவித்துள்ள விஷயம் குறித்து ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டுள்ளதா?

எட்-டெக் செயலி தகவல் மீறல் விவகாரத்தை எதிர்கொள்ள பாதுகாப்பு ஏற்பாடு அல்லது திட்டங்களை ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளதா?

அவ்வாறு நடைமுறைப்படுத்தியிருந்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் அவ்வாறு

செய்யாவிடில் அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

தீக்ஷா செயலி மென்பொருள் திட்டத்தில் பதிவு செய்துள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்க பாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் மக்களவையில் தாக்கல் செய்த பதில் விவரம் வருமாறு:**

டிஜிட்டல் இணையதள கல்வித் திட்டத்திற்காக ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் தீக்ஷா என்ற அமைப்பை உருவாக்கியது. இதன்படி கியூ ஆர் குறியீடு உள்ள பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. முதல் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை பயிற்றுவிப்பதற்கான சிறப்பு வகை எலக்ட்ரானிக் உள்ளடக்கங்கள் அவற்றில் இடம் பெற்றிருந்தன. மொத்தம் 36 மொழிகளில் அவை உள்ளடங்கி உள்ளன.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிபிஎஸ்சி (ஒன்றிய அரசின் இடைநிலைக் கல்வி வாரியம்) என்ஐஓஎஸ் (தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி முறை) மற்றும் என்சிஇஆர்டி (கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழு) மூலம் இப்பாடத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றைப் பயன்படுத்துவோர் பற்றிய துல்லியமான முழு தகவல் சேகரிக்கப்படவில்லை. ஐ.பி. மூலம் மட்டுமே தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதுவும் பயன்பாட்டாளரின் ஒப்புதல் பெற்ற பிறகே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே

சமயம் பயன்பாட்டாளரின் ஐ.பி. விலாச விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

விளம்பரமோ அல்லது தனிநபர் பற்றிய விளம்பரமோ வர்த்தக நோக்கத்திற்காகவோ அல்லது கூகுள் பயன்பாட்டிற்கோ தீக்ஷா இந்த விவரங்களைப் பயன்படுத்தவில்லை.

எட்-டெக் சம்பந்தமான விஷயங்களில் தகவல் மீறலைத் தடுப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய கணினி அவசரகால நடவடிக்கை குழு (சிஇஆர்டி-ஐஇன்) இணையதளங்கள் மீது கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தகவல் மீறல் தொடர்பான தகவல்களையும் தெரிவித்து வருகிறது. இந்த தகவல்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. பயன்பாட்டில் எச்சரிக்கையுடன் செயல்பட ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் இந்திய குடிமக்களுக்கு அறிவுறுத்தி வருகிறது. கல்வி சுற்றுச்சூழல் முறையில் எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக்கூடாது? எதனைப் பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தி வருகிறது.

2020 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்பு இ-வர்த்தக சட்டவிதிமுறைகளையும் நுகர்வோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒன்றிய அரசின் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நுகர்வோர்களாகிய பயன்பாட்டாளர்களின் உரிமைகளையும் பரிகாரங்களையும் தேடிக்கொள்ள வழிவகை செய்துள்ளது.

எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாவதைத் தடுப்பதற்கான நடைமுறைகளுக்கு இ-வர்த்தக விதிமுறைகள் உதவிகரமாக உள்ளன.

விளம்பரதாரர் ஒழுங்கு முறை விதிகளின்படி சுயஒழுங்குமுறை கட்டுப்பாட்டுடன் எட்-டெக் கல்வி நிறுவனங்கள் செயல்பட வேண்டும் என்று ஒன்றிய அரசின் கல்வித் துறை அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. விதிமுறைகள் தொடர்பான புகார்களை ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் இணையதளத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீக்ஷா முறையானது எலக்ட்ரானிக் உள்ளடக்கங்களையும் (மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் சம்பந்தப்பட்டவர்கள்) ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டை வளர்ப்பதற்குமான வழிவகைகளையும் கொண்டதாகும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அத்துடன் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் என்சிஇஆர்டி, சிபிஎஸ்சி, என்ஐஓஎஸ் ஆகிய அமைப்புகளும் ஆகிய தீக்ஷா முறையைப் பின்பற்றலாம்.

தீக்ஷா முறையில் 9,660 பாடங்கள் இடம் பெற்றுள்ளன இதற்காக மொத்தம் 16,83,03,869 பாடத் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 13,76,88,749 பாடவகுப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தீக்ஷா மொத்தம் 3.2 லட்சம் இ-பாடத்திட்டங்களை மேற்குறிப்பிட்ட அமைப்புகளிடம் பதிவேற்றம் செய்துள்ளது.

தீக்ஷாவில் உள்நுழைய பயன்பாட்டாளர்களிடம் இருந்து கட்டாயமாக விவரங்களைக் கேட்பதில்லை. எனவே மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கிடைக்கவில்லை

29-3-2023 வரை தீக்ஷாவின் கற்றல் அமர்வுகளின் **எண்ணிக்கை** 5,24,05,84,911 ஆகும். அதாவது மொத்தம் 61,17,97,29,750 நிமிடங்கள் கற்றல் அமர்வுகள் நடைபெற்றுள்ளன.

******